# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, FAST TRACK COURT, ARANI.

## S.C.No.95/2022

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.7** |
| **Name** | **:** | **திருமதி.விஜயா** |
| **Husband's Name** | **:** | **குணசேகரன்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 8.11.2023.**

**முதல் விசாரணை -**

**நான் ஆரணி உறவுசிங்போர்டில் வசிக்கிறேன். குடும்ப தலைவி. புருஷோத்தமன் என்னுடைய தம்பி. ஆஜர் எதிரி ராஜசேகர் என்னுடைய தம்பி. ரமேஷ் என்னுடைய தம்பி. புருஷோத்தமன் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் எதுவும் தெரியாது.**

நான் உறவு சிங்போர்டில் இருந்தேன். ஊர்க்காரர்கள் போன் செய்தார்கள். என்றைய தினம் போன் செய்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. என்ன போன் செய்தார்கள் என்றால் என் தம்பி புருஷோத்தமனுக்கு அடிப்பட்டு இருப்பதாக சொன்னார்கள். நான் போய் பார்த்தேன். நான் போய் பார்த்தபோது தீக்காயம் மாதிரி இருந்தது. எப்படி தீக்காயம் மாதிரி ஆனது என்றால் எப்படி என்று எனக்கு தெரியாது. தீக்காயம் எங்கெங்கு இருந்தது என்றால் உடம்பு, கை கால்களில் இருந்தது. பிறகு பார்த்துவிட்டு ஆம்புலன்ஸ் வரவழைத்து அனுப்பி வைத்தோம். மருத்துவமனையில் மருத்துவர் என்னை விசாரித்தாரா என்றால் விசாரிக்கவில்லை.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரணை செய்தபோது வாக்குமூலத்தில் உள்ளவாறு வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது ஒரு தம்பி இறந்துவிட்டதால், மற்றொரு தம்பியை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ரமேசும், எதிரி ராஜசேகரும் சென்னையில் வேலை செய்து வருகிறார்கள் என்றால் சரி தான். இறந்த புருஷோத்தமன் எந்த வேலைக்கும் போகாமல் குடித்துவிட்டு ஊர் வம்புகள் செய்து வந்தார் என்றால் சரி தான். அதனால் தான் புருஷோத்தமனின் மனைவி புருஷோத்தமனை விட்டு 8 வருடத்திற்கு முன்பு சென்றுவிட்டார் என்றால் சரி தான்.

புருஷோத்தமன் வசித்து வந்த வீட்டில் என்னுடைய அப்பா வெள்ளை, எதிரியின் மனைவி குழந்தைகள், ரமேசின் மனைவி குழந்தைகள் வசித்து வந்தார்கள் என்றால் எனக்கு பேச்சு வார்த்தை இல்லாததால் நான் போய் பார்த்தது கிடையாது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.